15.07.2025

O.S.No.184/2015

வா.சா.3.திரு.சந்திரன் த.பெ.உடையப்பபிள்ளை

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 7 ஆம் வகுப்பு படித்துள்ளேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். விவசாயமும் செய்கிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். 1 ம் வாதி சண்முகம்பிள்ளை எனது பெரியப்பா மகன் ஆவார். 1 ம் வாதி சண்முகம்பிள்ளை என்பவர் குடும்பத்தார் கேட்டு கொண்டதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ஆமாம். இந்த வழக்கின் அனைத்து விவரங்களும் எனக்கு தெரியும். தாவா சொத்தின் புல எண்.51 ஆகும். தாவா சொத்தின் புல எண்.51 அல்ல என்றாலும், புல எண்.52 என்றால் சரிதான். தாவா சொத்தின் புல எண்.52 ஆனது வருவாய் ஆவணங்களில் பொன்னாட்சிகுளம் என்று உள்ளது என்றால் சரிதான். பொன்னாட்சிகுளம் ஏறதாழ 8 ஏக்கர் பரப்பளவு உள்ளது என்றால் சரிதான். பொன்னாட்சிகுளத்தை நம்பி பல்வேறு விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். பொன்னாட்சிகுளத்தில் மூன்றுபுறம் கரை என்றாலும், ஒருபுறம் பாறை அமைந்துள்ளது என்றாலும் சரிதான். பொன்னாட்சிகுளத்தில் ஒரு பகுதியான பாறையில் வாழை கருப்பனசாமி என்ற கோவில் உள்ளது என்றால் சரிதான். அந்த கோவில் 2012 ஆம் ஆண்டு முதல் தான் உள்ளது. பொன்னாட்சிகுளம் மற்றும் பாறை அரசின் கட்டுபாட்டில் தான் உள்ளது என்றால் சரிதான். அந்த பாறையில் வாழை

கருப்பனசாமி கோவிலில் பொதுமக்கள் வழிப்பட்டு வருகிறார்கள் என்றால் சரிதான். 2012 ஆம் ஆண்டிற்கு பின்பு சாமி கும்பிடவருவார்கள். நாங்கள் சோளம், கம்பு ஆகியவற்றை அந்த பாறையில் காய வைத்து எடுத்து செல்வோம். நெற்கதிர்களை அடிப்போம்.

2. வழக்கின் வாதிகள் என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சாமி கும்பிட வந்தவர்கள் அருகில் உள்ள வயலில் பாட்டிலை உடைத்து போடுவதும், அருகில் உள்ள தோப்புகளில் மாங்காய் பறிப்பதும் என இடையூறு செய்தனர். எனவே இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாறை என்பது அரசுக்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான். இந்த வழக்கின் வாதி பாறையில் ஓட்டு வீடு வைத்துள்ளார் என்றும், வைக்கோல் அடைக்கும் இடம் வைத்துள்ளார் என்றும் கூறியுள்ளது சம்மந்தமாக வாதி அரசு அனுமதி இல்லாமல் அவ்வாறு செய்துள்ளார் என்றால் சரிதான். பொன்னாட்சிகுளம், பாறை ஆகியவை நீர்நிலை பகுதி என்றாலும், நீர்நிலை பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு மாண்புமிகு உயர் நீதிமன்றம், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளதால் ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு உரிமை உள்ளது என்றால் சரிதான்.

3. மேற்படி பாறையில் உள்ள கோவிலில் அருவாள் மற்றும் சூலம் ஆகியவை உள்ளது என்றாலும் 50 ஆண்டுகளுக்கு மேல் பொதுமக்கள் சாமி கும்பிட வருவார்கள் என்றாலும் சரியல்ல. 2012 ஆம் ஆண்டு முதல் தான் அந்த கோவில் உள்ளது. அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்தில் வாதிகளுக்கு எந்த ஒரு உரிமையும் இல்லாதபோது மேற்படி வாழைகருப்பனசாமி கோவிலை அகற்ற கோருவது சட்டப்படி செல்லாது

என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பதால் என்னுடைய சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்.P.மகாராஜன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.